செ.வெ.எண்:43/ஜனவரி நாள்:28.01.2016

**இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இ ன்று (28.01.2016) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள செம்மங்குண்டு ஊரணியை செம்மைப்படுத்தும் விதமாக மேற்கொண்டு வரும் மேம்பாட்டு பணிகளையும், தொடர்ந்து சிதம்பரம்பிள்ளை ஊரணியைச் சுற்றிலும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன்பின்பு சிதம்பரம் பிள்ளை ஊரணியின் வரத்துக் கால்வாய் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைவாக முடித்திட அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, முகவை ஊரணி, நீலகண்டி ஊரணி, அரண்மனை வீதி, லெட்சுமிபுரம் ஊரணி மற்றும் கிடாவெட்டி ஊரணி ஆகிய ஊரணிப்பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளையும், பழைய பேருந்து நிலையம் மற்றும் பட்டிணம்காத்தான் அருகில் உள்ள நகராட்சி உரக்கிடங்கினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து அலுவலர்களிடத்தில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊரணிகள் அனைத்தையும் தொடர்ந்து முறையாக பராமரித்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வின் போது இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ராம்பிரதீபன், ஆணையாளர் திரு.ப.முகமது சிராஜ்,சுகாதார அலுவலர் திரு.மு.சந்திரன், இராமநாதபுரம் வட்டாட்சியர் திரு.இரா.தர்மன், நகராட்சி உதவிப் பொறியாளர் திரு.பி.சுப்பிரமணியபிரபு ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்